★ விலை ரூபா 1:00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆனி 23 நம். 25 இதழ் 146

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 7—7—83

## கொழும்பு - காங்கேசன்துறை
# தபால் ரயில்சேவை இன்றுமுதல்மீண்டும்ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்புக்கும் காங்கேசன் துறைக்குமிடையிலான தபால் ரயில் சேவை இன்று முதல் மீண்டும் சேவையில் ஈடுபடுமென போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் போக்குவரத்து அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்தே அவர் இந்நடவடிக்கையை எடுத்துள்ளார்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எண்ணெய் ரயில் ஒன்றும் இன்று அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் முகம்மது எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திடம் தெரிவித்துள்ளார். [இ-ளெ]

## ஏழுமணியுடன் பஸ்சேவைகள் ரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் பஸ் சேவைகள் நேற்றிரவும் ஏழு மணியுடன் ரத்துச்செய்யப்பட்டன.

## காங்கேசன் சிமெந்து தொழிற்சாலையில்
# சீருடையில் வந்தவர்களால்
# துப்பாக்கி முனையில் வெடிமருந்து கொள்ளை!

## பாதுகாப்பு ஊழியர்களை கட்டிவைத்தார்கள்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் 3-ம் கட்டப் பகுதிக்குள் நுழைந்த சீருடை அணிந்த இனந்தெரியாத பத்துநபர்கள் கொண்டகோஷ்டி அங்கு காவலில்நின்ற நான்கு பாதுகாப்பு ஊழியர்களையும், இரு ஊழியர்களையும் துப்பாக்கிமுனையில் கட்டிப்போட்டு விட்டுக் களஞ்சிய அறைக்குள் வைக்கப்பட்டிருந்த பெறுமதிமிக்க- பயங்கரமான வெடி மருந்து வகைகளைக் கொள்ளை அடித்துச் சென்றுள்ளது.

நேற்று அதிகாலை மூன்று மணியளவில் இக்கொள்ளைச் சம்பவம் நடைபெற்றது.

இலக்கத் தகடு இல்லாத வெள்ளை நிற முள்ள ரெவிகா மினிவானில் சென்றே வெடி மருந்து வகைகளைக் கொள்ளையடித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சேற்று, வெடிமருந்து

(8ம் பக்கம் பார்க்க)

## தேசிய சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

937-வது தேசிய சுவீப் சீட்டிழுப்பின் முதல் மூன்று பரிசுகளும் வருமாறு:-

முதலாவது பரிசு
15 W 0548

இரண்டாவது பரிசு
10 N 0748

மூன்றாவது பரிசு
15 R 0205

## ‘இராணுவ’ உடையில் சென்ற ஆறுபேர் ‘மினிவானை’ எடுத்துச்சென்றனராம்!

(யாழ்ப்பாணம்)

தங்களை இராணுவத்தினர் என்றுகூறிக்கொண்டுஇராணுவ சீருடையில் சென்ற ஆறுபேர் கொண்ட கோஷ்டி ஒன்று தாவடியிலுள்ள இராமநாதன் என்பவருக்குச் சொந்தமான ரெவிகா மினிவான் ஒன்றை எடுத்துச் சென்றே காங்கேசன் துறை சிமெந்துத் தொழிற்சாலையின் 3-ம் கட்ட வேலைத் தளத்தின் களஞ்சிய அறையிலிருந்து வெடிமருந்து உபயோகிக்கும் கருவிகளை கொள்ளை அடித்ததாக பொலிஸ் விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் மேற்குறிப்பிட்டவரின் வீட்டுக்கு இராணுவ சீருடைதரித்த ஆறுபேர் துப்பாக்கிகளுடன் சென்று தாங்கள் இராணுவத்தைச் சேர்ந்தவர்களென்றும் தாங்கள் சென்ற வாகனம் பழுதடைந்து விட்டதாக அந்த வீட்டில் நின்றவானைத்

(8-ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி முனையில் திருநெல்வேலி உபதபால் நிலையம் பூட்டப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி உப - தபால் நிலையத்திற்கு நேற்றுச்சென்ற இரு இளைஞர்கள், துப்பாக்கி முனையில் தொலைபேசி, தாசுகளை உடைத்து நொருக்கி, உப-தபால்நிலையத்தைப்பூட்டியதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

உப-தபால் நிலையத்தில் கடமையாற்றிய திருமதி பி. சந்திரசேகரத்திடம், டாக்டர் தர்மலிங்கமும், கோவை மகேசனும் விடுதலை செய்யப்படும் வரை வேலை செய்யக்கூடாது என்று இரு இளைஞர்களும் எச்சரித்தனராம்.

இதன் பின்னர் உப-தபால் நிலைய யன்னலை அடித்து விட்டு திருமதி சந்திரசேகரத்தை வெளியேற்றினார்களாம்.

வெளியில் வந்து உப-தபால் நிலையக் கதவை பூட்டிவிட்டு அவர்கள் சென்றதாகவும் கூறப்படுகிறது (ஊ)

## அண்ணாமலை செந்தில்வேல் விடுவிக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் பொலிசாரினால் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்ட நவசமசமாஜக்கட்சியின் வடபிரதேச அமைப்பாளர் திரு. ஆ. க. அண்ணாமலையும், இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியைச் [இடது] சேர்ந்த திரு. வே. செந்தில்வேலும் நேற்று விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

## தர்மர், கோவை கொழும்பில் விசாரணை?

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலை அணி தலைவர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கமும், செயலாளர் திரு. கோவை மகேசனும் விசாரணைக்காக கொழும்பு கொண்டு செல்லப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## நல்லூர் உ. அ. அதிபர் காரியாலயம்
# துப்பாக்கிமுனையில் ஆறு இளைஞரினால் மூடப்பட்டது!

(ஏ. வி. மாணிக்கம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்குள் திடீரெனப் புகுந்த ஆறு இளைஞர்களைக் கொண்ட கோஷ்டியினர் துப்பாக்கிமுனையில் அங்கு கடமையாற்றிக்கொண்டிருந்த உதவி அரசாங்க அதிபர் உத்தியோகத்தர்களை வெளியேற்றி அலுவலகக் கதவுகளைப் மூடிப் பூட்டிவிட்டு திறப்புகளையும் எடுத்துக் கொண்டு சென்றுள்ளனர்.

நேற்று நண்பகல் இச்சம்பவம் நடைபெற்றது. திருநெல்வேலி சந்தியிலிருந்து 50 யார் தூரத்தில் இக்காரியாலயம் இருக்கிறது

இனந்தெரியாத ஆறு இளைஞர்களும் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்துக்குள் திடீரெனப்புகுந்து துப்பாக்கி துப்பாக்கி முனையில் ஊழியர்கள் எல்லோரையும் எழுந்து நின்று கைகளை உயர்த்தும்படி உத்தரவு பிறப்பித்தார்களாம் ஊழியர்கள் எழுந்து நின்றதும் அங்கிருந்த ‘ரோணியோ’ யந்திரம் தட்டச்சு இயந்திரம், தொலைபேசி என்பவற்றையும் நிலத்தில் போட்டு நொருக்கினார்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

## பகிரங்க ஏல விற்பனை

60 கன அடி உள்ள மலைவேப்பமரம் ஒன்று 1983-07-07ந் திகதி வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்கு யாழ். செயலகத்தின் முன்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். கொள்வனவு செய்வோர் உடனடியாக பணத்தைச் செலுத்தி 24 மணித்தியாலத்திற்குள் அம்மரத்தினை அகற்றுதல்வேண்டும்.

தேவநேசன் நேசையா
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம். (7872)

# வரி விளம்பரம்

## தேவை

ஜி. ஸி. ஈ, சித்தியடைந்த கணக்கியல் அனுபவமுள்ள பெண்கள் மின்சார உபகரண விற்பனை ஸ்தாபனத்திற்கு உடனடியாகத் தேவை. சொந்த கையெழுத்துடன் விண்ணப்பிக்கவும். வி ஸ்ரீ சக்திவேல் Pats Power Electricals 601, கே. கே. எஸ் றோட் யாழ்ப்பாணம். 7869

பைண்டர் மெஷின் மைண்டர், பிளேட்டிங் மெஷினிலும் வேலை செய்யத் தெரிந்த பைண்டர் (BOOK) தேவை. உடன் நேரில் வரவும். நிர்மலகம் சித்திரா அச்சகம் 310, மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம். 7858

பாதணி, அழகுசாதனப் பொருட்கள் விற்பனை செய்வதில் அனுபவமுள்ள விற்பனையாளர்கள் (ஆண் / பெண்) தேவை. யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. அறிமுகமான இருவரது நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும் விபரங்களுக்கு:- நாதன்ஸ் · நவீன சந்தை, மின்சார நிலையவீதி. யாழ்ப்பாணம். போன்; 23540 7844

## விற்பனைக்கு

கல்வியங்காடு இராச வீதிக்கருகில் நாலு பரப்புக்காணி றோட்டோரத்தில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: இ. மகேசன் சேணியடி திருநெல்வேலி. 7863

நாவற்குழியில் கண்டி றோட்டில் பயனுடன் கூடியதென்னை மரங்களுடன் 16 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கு அல்லது தொழிற்சாலை அமைப்பதற்கு உகந்த இடம். விபரங்களுக்கு; 6, நல்லூர் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். தொலைபேசி: 23175. [7814]

கோழி வளர்ப்பவர்களுக்கு எங்களிடம் புளுங்கல் அரிசி குறுநல் விற்பனைக்கு உண்டு. விஜிதா அரிசி ஆலை தாவடி தெற்கு கொக்குவில். 7870

HONDA CD 125 (Twin) 84 ஸ்ரீ மோட்டார் இலக்க கறுப்பு நிறம் விபரங்களுக்கு கே. கணேஸ்வரன், 230 /14 காங்கேசன்துறைவீதி, (கதிரேசன் கோயில் முன்) யாழ்ப்பாணம். 7857

பாடசாலைகள், அலுவலகங்கள் அண்மையில் யாழ் சுண்டிக்குளியில் வியாபார ஸ்தாபனம் அமைப்பதற்கேற்ற 1 பரப்பு 5 குழி காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பரதாரர் 48, கண்டி றோட், யாழ்ப்பாணம். 7818

## வகுப்புக்கள்

C. E I. Part 1 & 2 (Electrical, Electronics, Mechanical) May 1984 நடைபெறுகின்றது. இலண்டன் பதிவுக்கான முடிவு திகதி 15-8-1983. புதிய மோட்டார் பொறியியல் [A. M. I M. I (Lond )] CITY and Guilds Electrical, Mechanical, Part 1 2. 3; Institute of Quantity Surveyor. Builders Quantity வகுப்புகள் 10-07-1983 ஆரம்பமாகின்றது. இலங்கையில், இலண்டன் பொறியியல் தாபனங்களால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே தாபனமாகும். தொடர்பு: Jaffna Academy of Science-Technology; 22, Ramiah Chettiar Lane, Jaffna. (சாந்தி சினிமாவுக்கருகில்). 7846

## தவறிவிட்டது

3-7-83ல் திருநெல்வேலி திவுக்குள் யாழ்ப்பாணம் 3ம் குறுக்குத் தெருவுக்கு மிடைப்பட்ட றோட்டில் எனது மோட்டார் சைக்கிள் லைசென்சும் 3 ஸ்ரீ 9426 இலக்க மோட்டார் சைக்கிள் இன்சூறன்சும், ரசீதும் விழுந்து விட்டது. கண்டெடுத்தோர் தயவுசெய்து ஒப்படைக்கவும் அல்லது தகவல் தரவும். சி. ஏகாம்பரம் 6ம் வட்டாரம் மண்டைதீவு. தகுந்த சன்மானம் வழங்கப்படும் 7866

## தவறிவிட்டதா?

1 சோடி [இரண்டு] நாம்பன் மாடுகள் குறி ஆ. ச. க. இடப்பட்டது தவறவிட்டவர்கள் மானிப்பாய் உடுவில் பயிர்ச்செய்கை உத்தியோகத்தரிடம் அல்லது உடுவில் கமநல சேவை நிலையத்தில் 9-7-1983 காலை 9 மணிக்குமுன் தொடர்புகொள்ளவும். 7867

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

புன்னாலைக்கட்டுவன் புன்னாலைக்கட்டுவன்தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற வைரவப்பிள்ளை நரசிங்கம் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்

மரணமெய்திவரர் கந்தையா சங்கரப்பிள்ளை புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன் தற்போது அப்போத் மனுதாரர்

மரணசாதன நியமாதிக்கம் இல 153

எதிரசக நரசிங்கம் முத்துக்குமாரு- புன்னாலைக்கட்டுவன் தெற்கு. புன்னாலைக்கட்டுவன்

எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டு, இறந்து போனவரின் மரணசாதனத்தை என்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு ஆவணிமாதம் 3 ஆந் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஆ. சிவபாதசுந்தரம்
பதிவாளர்

1983ம் ஆண்டு சித்திரை மாதம் 19ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. என்னால் வரையப்பட்டது.

செ. இராமலிங்கம்
மனுதாரரின் சட்டத்தரணி
7759

## ஆலயத்தில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)
பொதுநலப் பேரணியின் ஆதரவில் இணுவில் காரைக்காடு சிவன்கோவிலில் சிரமதானம் நடைபெற்றது.

பதினொரு சமூக சேவை சங்கங்களைச்சேர்ந்தசுமார் 50 பேர் பிலிப்பைன்ஸ் சுவாமி ஆச்சாரியகுமார் பரமாச்சாரியார் தலைமையில் இச்சிரமதானம் நடைபெற்றது.

(ஈ)

## முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை மயிலிட்டி உப அலுவலகத்தைச் சேர்ந்த நடுக்கட்டல் உத்தியோகத்தரால் 55ம் இலக்க சேகரிப்புப் பற்றுச் சீட்டுப்புத்தகம் தவறவிடப்பட்டுள்ளது இப்புத்தகத்தைக் கண்டெடுப்பவர்கள் அதனை இவ் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேற்படி பற்றுச்சீட்டுப் புத்தகத்திலுள்ள 5459 தொடக்கம் 5500 வரையான பற்றுச்சீட்டுக்கள் செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ளன என்பதையும் அறியத்தருகிறேன்.

சி. பாலசுப்பிரமணியம்
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்
யா. அ. ச. உப அலுவலகம்,
மயிலிட்டி,
காங்கேசன்துறை.
30-6-83 7865

## விற்பனைக்கு

12—15 அடி உயர புதிய தேருமியம் மூலம் பூசப்பட்ட கொடிஸ்தம்பம் 12—35—45 இறாத்தல் எடையுள்ள ஆலய மணிகள் விற்பனைக்குண்டு.

பூரண விளக்கத்துடன் பூசுகிப்பு ரக பம்பாய் வெங்கல விளக்குகள் விற்பனைக்குண்டு.

பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்
251, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.
(7860)

## இரண்டாவது நினைவஞ்சலி



### ஸ்ரீதேவன் ரவீந்திரன்

தோற்றம்: 8-9-1962
மறைவு: 13-7-1981

எங்கள் குடும்பத்தில் மூத்த குல விளக்காய் இருந்து குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் நல்வழி காட்டியாகத்திகழ்ந்து. நட்புக்கு இலக்கணமாய் விளங்கி, நற்பண்புகளுடன் வாழ்ந்த உத்தம சீலனே திடீரென்று எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட அறிவுச் சுடரே உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

என்றும் எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்காமல் நிலைத்திருக்கும், உன் திடீர் பிரிவை தாங்கமாட்டாத

அப்பா, அம்மா,
தம்பி, உறவினர்,
நண்பர்கள்.
36/1, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(7847)

## தீர்த்தோற்சவம்

(கரவெட்டி)
வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 15ம் திகதி ஆரம்பமாகி 24ம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும்.

16ம் திகதி மணவாளக்கோல திருவிழாவும் சிறப்பாக நடைபெறும்.

## தேவை

மரத்தளபாடங்கள் பொலிஷ் பண்ணுவதற்கும் தச்சுவேலை செய்வதற்கும் வேலையாட்கள் தேவை. நேரில் வரவும்.

### டில்கா பேணிச்சர் பலெஸ்
234, 236, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 24186

## HONDA மோட்டார் சைக்கிள்கள்

| மொடல் | தற்போதைய விலை | விசேஷ கழிவு |
|---|---|---|
| C—70 | 15,700/- | 900/- |
| C—90 | 17,900/- | 1,100/- |
| CG—125 | 23,950/- | 1,150/- |

அத்துடன்

**இனும்** ஒரு நோலான் கெல்மட்
ஒரு வைசர்
இரு லக்கேஜ் எலாஸ்டிக்

இந்த மாபெரும் மலிவு விற்பனை
இன்னும் சில தினங்கள் மட்டுமே.

### கன்ரேபியா லிமிட்டட்
21, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24201

உ
குகமயம்

## தசாக கிருகயக்ஞ அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ருதிரோத்காரி ஆண்டு ஆனித்திங்கள்
15-ம் நாள் (29-6-1983) புதன்கிழமை
பகல் 1-15 மணிக்கு முருகனின் பாத கமலங்களைப் பற்றிய
எமது தந்தையார்

### பிரம்மஸ்ரீ ச. நாகேஸ்வரஐயர்

அவர்களின் ஆன்மாசாந்தி அடைய அன்னாரின்

1. தசாகம் (8-7-83) வெள்ளிக்கிழமை
2. ஏகோதிஷ்டம் மாசியம் (9-7-83) சனிக்கிழமை
3. சபிண்டீகரணம் (10-7-83) ஞாயிற்றுக்கிழமை
4. கிருகயக்ஞம் சமாராதனை (11-7-83) திங்கட்கிழமை

ஆகிய கிரியைகள் நடைபெறும்.
உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும்
குடும்பசமேதராய் பங்கு பற்றுமாறு
அன்புடன் அழைக்கிறோம்.

மக்கள்
நா சண்முகரத்தினசர்மா, நா. கணேசரத்தினசர்மா,
நா. கார்த்திகேயசர்மா (ரவி),
நா. மதியழகசர்மா (சந்திரன்)
மணற்காடு, காரைநகர். (7862)

வெளிநாடு செல்கிறீர்களா?
உங்கள் விமான பயணச் சீட்டுக்களை
எந்தவித சிரமமின்றி யாழ் நகரிலேயே
பெற்றுக்கொள்ளுங்கள்.
விபரங்களுக்கு:-
தமிழன்ஸ்கம்பனி லிமிட்டெட்
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23680

# "காலிஸ்தான்' பிரிவினைவாதிகளை கனேடிய அரசு ஆதரிக்கவில்லை"

## இந்தியாவில் கனேடிய பிரதிப் பிரதமர்

புதுடில்லி, ஜூலை 6

'காலிஸ்தான்' போன்ற பிரிவினைவாத இயக்கங்களுக்கு கனடா அரசாங்கம் ஒரு போதும் ஆதரவளிப்பதில்லை." என்று இந்தியா வந்துள்ள கனடா பிரதிப் பிரதம மந்திரி திரு. மெக்கேகன் தெரிவித்தார்.

திரு. மெக்கேகன் இலங்கையில் தமது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்தபின்னர் தற்போது இந்தியா வந்துள்ளார். திரு. மெக்கேகன் புதுடில்லியில் பத்திரிகை மகாநாடு ஒன்றிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இவர் அம்மகாநாட்டில் மேலும் தெரிவிக்கையில், கனடாவில் சுமார் இரண்டு லட்சம் இந்திய இனத்தவர் வாழ்கின்றனரென்றும் அவர்களுக்கும் கனடாவில் குடியேறியுள்ள ஏனைய நாட்டவர்களுக்குப் போன்றே பூரண குடியியல் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

'கனேடிய அரசாங்கம் இந்தியர்களுக்கு அங்கு பூரண குடியியல் உரிமைகளை வழங்கியுள்ளது. ஆனால் அவர்களது அரசியல் பிரச்சினையில் அது தலையிடவில்லை. நாட்டைப் பிரிக்கும் 'காலிஸ்தான்' போன்ற பிரிவினைவாத இயக்கங்களுக்குக் கனடா அரசாங்கம் ஒருபோதும் ஆதரவு வழங்கியது கிடையாது' என்றும் திரு. மெக்கேகன் குறிப்பிட்டார்.

திரு. மெக்கேகன் இலங்கைப் பயணத்தின்போது, கனடாவில் குடியேறியுள்ள வெளிநாட்டவர்களுக்கு அவர்களது சொந்த அரசியல் நடவடிக்கைகளில் தலையிடப் பூரண உரிமையுண்டென்றும், ஆனால் அந்த நடவடிக்கைகளில் கனடா அரசாங்கம் ஒருபோதும் தலையிடாது என்றும் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## நேரடித் தொலைத் தொடர்பு

(கரவெட்டி)

யாழ். மாவட்டத்திலுள்ள உபதபால் அலுவலகங்களிலிருந்து யாழ். தொலைத்தொடர்பு நிலையத்துடன் நேரடித் தொடர்பு கொள்ளக் கூடிய வகையில் இணைப்பு நடவடிக்கைகள் யாழ் தொலைத் தொடர்பு நிலையத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

சுமார் 1 கோடி ரூபா செலவில் உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் இந்த வேலைத் திட்டத்தால் தற்பொழுது யாழ் தொலைத்தொடர்பு நிலையத்துடன் தொடர்பு கொள்வதற்கு பிரதான தபால் அலுவலகங்கள் மூலம் தொடர்பு கொள்வதில் ஏற்படும் சிரமங்கள் நீங்கும் எனக் கூறப்படுகிறது.

## "ஐரோப்பாவில் அமெரிக்க ஏவுகணைகளை அனுமதிக்க வேண்டாம்"

### ஜேர்மன் அதிபரிடம் அந்ரபோவ் கோரிக்கை

மாஸ்கோ, ஜூலை 6

"ஐரோப்பாவில் நடுத்தர ஏவுகணைகளை அமெரிக்கா நிறுவ முயலுவதை மேற்கு ஜேர்மனி அனுமதிக்கக் கூடாது" என்று சோவியத் ஜனாதிபதி திரு. யூரி அந்ரபோவ் கூறினார்.

திரு. அந்தரபோவ் கிரெம்ளினில் நேற்று மேற்கு ஜேர்மன் அதிபர் திரு. ஹெல்மட் கோலைச் சந்தித்தார். அச்சந்திப்பின்போதே மேற்கண்டவாறு திரு. கோலிடம், திரு. அந்ரபோவ் கேட்டுக்கொண்டார்.

இவ்விருதலைவர்களும் நீண்ட நேரத்தைக் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர். திரு அந்ரபோவ் அமெரிக்காவின் நடுத்தர ஏவுகணைகளை ஐரோப்பாவில் நிறுவ அனுமதிக்கவேண்டாமென கேட்டுக்கொண்ட அதேவேளை அணுஆயுத மற்றும், போர்த் தளபாட உற்பத்திகளைக் குறைக்க சோவியத் ஆதரவு வழங்குமென்றும் திரு. கோலிடம் கூறினார்.

மேற்கு ஜேர்மன் அதிபர் திரு. ஹெல்மட் கோலே, திரு. அந்தரபோவ் சோவியத் ஜனாதிபதியான பின்னர் அவரைச் சந்தித்த முதலாவது வெளிநாட்டு தேசத் தலைவரென்பது குறிப்பிடத்தக்கது.

சோவியத் அதிபர் சார்பில் சோவியத் பிரதமரே மேற்கு ஜேர்மன் அதிபருடன் பேச்சுக்கள் பலவற்றை நடத்தினார். சோவியத் அதிபர் திரு. அந்ரபோவ் சிறுநீரக வியாதியால் தற்போது நோய்வாய்ப்பட்டுள்ளார். ஆகையினாலேயே அவரால் முழுஅளவில் பேச்சுக்கள் எதிலும் கலந்து கொள்ளமுடியவில்லை. (இ)

## பாகிஸ்தானில் எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது!

கராய்ச்சி, ஜூலை 6

பாகிஸ்தானின் கராச்சி நகரில் பத்து எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். இவர்களுடன் இவர்களது ஆதரவாளர்கள் 40 பேரும் கைதாகினர்.

கராச்சி நகரில் பாகிஸ்தானில் நிலவிவரும் இராணுவ ஆட்சியை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களில் இவர்கள் இறங்கியிருந்தனர். இதனையடுத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றைய தினத்தை இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் 'கறுப்புத்தினம்' என்று குறிப்பிட்டு துக்கதினமாக அனுட்டித்தனர் அத்துடன் கறுப்புக்கொடிகளையும் அரசுக்கெதிரான கோஷங்களையும் எழுப்பி இவர்கள் ஆர்ப்பாட்டங்களில் இறங்கியிருந்தனர். (இ)

## பிரிட்டனில் புகைப்போர் தொகை பெரும்வீழ்ச்சி!

லண்டன், ஜூலை 6

இங்கிலாந்தில் கோடிக்கணக்கானவர்கள் புகைபிடிக்கும் பழக்கத்தைக் கைவிட்டுள்ளனர். 1980-ம் ஆண்டுக்குப் பின்னரே இவ்வாறு புகைப்பிடிப்போர் தொகை சரியத் தொடங்கியது.

இத்தகவல்கள் பிரிட்டனில் நடத்தப்பட்ட ஆய்வொன்றையடுத்து வெளியாகியுள்ளன. இவ்வாய்வு அறிக்கையில் மேலும், ஆண்களில் முப்பத்திரெண்டு சதவீதத்திலிருந்து நாற்பத்திரெண்டு சதவீதமானவர்களும், பெண்களில் முப்பத்திமூன்று சதவீதத்திலிருந்து முப்பத்தியேழு சதவீதமானவர்களுமாகப் புகைபிடிப்போர் தொகை சரிவடைந்துள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகைப்பிடிப்போரிலும் பலர் தாம் புகைக்கும், சுருட்டு, சிகரெட் போன்றவற்றின் எண்ணிக்கையைக் குறைத்துவருகின்றனரென்றும் அந்த ஆய்வறிக்கை தெரிவிக்கின்றது.

பிரிட்டனில் அண்மைக் காலங்களில் புகைபிடித்தலுக்கெதிராக பெருமளவு பிரசாரங்கள் பல்வேறு இயக்கங்களால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. [இ]

## பாடசாலைக்கு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணார்பண்ணை இனத்தம்பி வித்தியாலயப் பெரும் திருத்தவேலைகளுக்காக நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு எம். சிவசிதம்பரம் இருபத்தைந்தாயிரம் ரூபா பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கியுள்ளார்.

இவ்வேலைகளை இம்மாத இறுதியில் செய்வதற்கேற்ற நடவடிக்கைகளை யாழ் கல்வித்திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இவ் வித்தியாலய அபிவிருத்திச்சபைச்செயலாளர் ஏ.பேரம்பலம் அதிபர் கா.கணேசநாதன் ஆகியோர் எம்.பி யை நேரில்கண்டு இவ்வித்தியாலயப் பற்றாக்குறைகள் சம்பந்தமாக கலந்துரையாடி மகஜரைக் கையளித்தனர். [இ]

## பத்திரிகையாளர்களுக்கு குறைந்த கட்டணத்தில் பருவகாலச் சீட்டு!

[கொழும்பு]

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு மத்திய கிழக்குநாடுகளில் சென்று அங்குள்ள பத்திரிகை ஸ்தாபனங்களில் குறுகியகாலப்பயிற்சி பெறுவதற்கு ஏற்பாடு செய்வதாகப் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மத் உறுதியளித்துள்ளார்.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தூதுக்குழுவொன்று நேற்று அமைச்சரைப் பேட்டி கண்டபோது இவ்வுறுதியை அவர் அளித்தார். பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் திரு. ஆர். சிவகுருநாதன், செயலாளர் திரு. குலவிட்ட பண்டார ஆகியவர்கள் அடங்கிய தூதுக்குழு அமைச்சரைப் பேட்டிகண்டது.

பத்திரிகையாளர்களுக்கு மிகக்குறைந்த கட்டணத்தில் பஸ் பருவகாலச்சீட்டுக்களை வழங்குவதற்கு உதவி புரியவும் அமைச்சர் உறுதியளித்தார். ஆகஸ்ட் மாதம் இந்தச் சலுகைக்கட்டணவசதி அமுலுக்கு வரும்வகையில் ஏற்பாடு செய்ய அமைச்சர் ஒப்புக்கொண்டார். வடபகுதியில் பணிபுரியும் உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கும் இந்தச் சலுகைக்கட்டணம் வசதி கிடைக்க உதவிசெய்வதாக அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

## "கல்வித்துறை ஒருவழிப் பாதையல்ல!"

### பணிப்பாளர் முருகையன் கூறுகிறார்

[துணுக்காய்]

"நகரங்களிலே போக்குவரத்தில் இடைஞ்சல் ஏற்படாமலிருப்பதற்காகச் சில வீதிகளை ஒரு வழிப்பாதையாக்கியிருக்கிறார்கள் ஒரு பாதையால் வாகனங்கள் வரமுடியும்; போகமுடியாது இதுபோலா கல்வித்துறையில் ஈடுபட்டவர்களிலும் அநேகர் ஒருவழிப் பாதைக்காரராய் இருக்கின்றார்கள் அவ்விதம் வாழ்ந்தால் அவர்களின் வளர்ச்சி மட்டுப்பட்டதாய் விடும் ஒவ்வொருவரும் பல துறைகளிலுஞ் செல்லும் ஆர்வமுடையவர்களாயிருக்கவேண்டும்"

மல்லாவி மகாவித்தியாலயத்தின் உயர்தர மாணவர் ஒன்றியம் அதன் தலைவர் செல்வன் தெ. பாலசுப்பிரமணியத்தின் தலைமையில் நடாத்திய மதியபோசன விருந்திலே முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய முல்லைத்தீவு மாவட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. இ. முருகையன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது!

ஒருவர் ஆரம்பக்கல்வி ஆசிரியராக வந்துவிட்டால் இறுதிவரையும் ஆரம்பக்கல்வி ஆசிரியராகவேயிருந்து விடுகிறார் கலைப்பட்டதாரியாகவோ விஞ்ஞானப்பட்டதாரியாகவோ வந்துவிட்ட ஒருவர் அந்த எல்லைக்குள்ளேயே நின்றுவிடுகிறார். எழுதுவினைஞராகிவிட்ட ஒருவர் ஓய்வுபெறும் வரை அப்படியேவாழ்ந்துவிடுகிறார். அவர்களது விசேட ஆற்றல்கள்வளரமுடியாமற் போய்விடுகின்றன. ஒவ்வொருவரும் தமக்கு விருப்பமுள்ள வேறு துறையிலும் தங்கள் ஆற்றல்களைப் பயன்படுத்த வேண்டும் அப்போது அவர்கள் பிரகாசிக்கவும் முன்னேறவும் வழிஏற்படும்.

இவ்வைபவத்தில் கல்வியதிகாரிகள் திரு. க. சிவசுப்பிரமணியம், திரு. க. கந்தசாமி, வட்டாரக்கல்வியதிகாரிகள் திரு. மு. சிவானந்தம், திரு. ச. நடராசா விஞ்ஞானக்கல்வியதிகாரி திருமதி பி. கணேசலிங்கம், உடற்கல்வியதிகாரி திரு. அமலதாசன், முல்லைத்தீவு நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு திரு. க. முத்துக்குமாரசூரியர், ஒட்டுசுட்டான் ம. வி. அதிபர் திரு. கனகையன் ஆகியோரும் சிறப்புவிருந்தினராகக் கலந்து

[7-ம் பக்கம் பார்க்க]

## வட இந்தியாவில்

# கடும்பருவமழை; 66பேர்பலி! ஆயிரக்கணக்கினர் வீடிழப்பு!

புதுடில்லி, ஜூலை 6

வட இந்திய மாநிலங்களில் ஏற்பட்டுள்ள பலத்த மழை காரணமாகச் சுமார் 66 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளதுடன் வேறும் பலர் காணாமல்போயுள்ளனரென்றும் தெரிவிக்கப்பட்டது.

வட இந்திய மாநிலங்களில் பருவமழை ஆரம்பித்துள்ளது. இதனால் பெரும் நதிகளிலும், அவற்றைச்சேரும் கிளைநதிகளிலும் தண்ணீர் மட்டம் கணிசமாக உயர்வடைந்துள்ளது.

மகாராஷ்டிரா மாநிலமே மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு நிலச்சரிவுகள் பல இடங்களில் ஏற்பட்டுள்ளன. இதனால் பலர் உயிரிழந்துள்ளதுடன் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

இம்மாநிலத்தில் ரத்னகிரி மாவட்டத்தில் நிலச்சரிவினால் 30 பேர் பலியாகியுள்ளனர். 30,000 வீடுகள் சேதமடைந்துள்ளன.

மின்சாரம், தண்ணீர் விநியோகம், போக்குவரத்து ஆகியவையும் படுமோசமாக வட இந்திய மாநிலங்களில் பாதிக்கப்பட்டுள்ளன.

அஸாம், மேற்கு வங்காளம், ஜம்முகாஷ்மீர் ஆகியவையும் பருவமழை அழிவுக்குள்ளான வட இந்திய மாநிலங்களில் அடங்குகின்றன. பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களில் அரசாங்கங்கள் நிவாரண வேலைகளில் துரிதமாக இறங்கியுள்ளன. (இ)

### மணிவாக்கு

உடையானது பெரும்பாலும் ஒரு மனிதனின் இயல்பை வெளிப்படுத்தி உணர்த்துகின்றது.

—ஷேக்ஸ்பியர்

# நமது நோக்கு

## அமெரிக்காவின் கல்விப் போர்

பிரிட்டன் அமெரிக்கா போன்ற ஜனநாயக ஆட்சியில் பிரதமருக்கோ ஜனாதிபதிக்கோ உள்ள அதிகாரம் எந்த எதிர்ப்பையும் முறியடிக்கவல்லது.

இந்த நிலைமையில் இன்று இவ்விரு நாடுகளிலுமே ஏற்படும் மாற்றம் குறிப்பிடத்தக்கது.

மக்களுக்கு உள்ள இறைமையை வெளிக்காட்டும் அவசியமும், சூழ்நிலை மாற்றமும் அதிகரிப்பதால், அவர்களின் பிரதிநிதிகள் கட்சிக்கொள்கைகளுக்கு 'ஆமா'ச் சொல்லுவது குறைந்துவருகிறது.

பிரிட்டனில் திருமதி தட்சருக்கு வெற்றிகிட்டியபோதும், அதன்விளைவு அவருக்கு ஆட்சி சுலபமென்ற கருத்தைக்கொண்டதல்ல.

வேலையின்மை, அணு ஆயுத நெருக்கடி, பொது நல சேவைகள் போன்ற விடயங்களில் பிரதமர் தட்சரின் போக்குக்கு அவருடைய கட்சியிலேயே கடும் எதிர்ப்புண்டு. அணு ஆயுதப்போரை எவ்விதத்திலும் எதிர்க்கவேண்டுமென்ற பரவலான கருத்து பிரதமருடன் பொதுமக்கள் போர் தொடுக்குமளவிற்குப் பலம்பெற்றிருக்கிறது.

அமெரிக்காவில் அதிகரித்துவரும் விழிப்புணர்வு மக்கள் ஆட்சியில் ஒரு புதுத்திருப்பத்தை ஏற்படுத்தமுடியும்.

அமெரிக்க ஜனாதிபதியென்றால் நான்கு வருடங்களுக்கு உலகின் மிகப்பெரிய பலமுடைய நாட்டின் முடிசூடா மன்னனென்பது மரபு. அண்மையில் நிக்ஸன் விவகாரம் இதற்கு விதிவிலக்கு.

இன்றும் ஜனாதிபதி றீகன் அந்த நிலையிலிருந்து பல அற்புதங்களை நிகழ்த்தலாம். ஆனால் அடுத்த தவணை ஆட்சியை நாடினால் இன்றைய எதிர்ப்பை அவர் பொருட்படுத்தவேண்டியது இன்றியமையாதது.

உலகின் பல நாடுகளுக்கு முக்கியமாக மூன்றாம் உலக வறிய நாடுகளுக்கு நிதி உட்பட பலவிதமான உதவிகளைச்செய்யும் ஆற்றல் படைத்த அமெரிக்கா இன்று றீகனின் ஆட்சியில் கடும் 'பிடி' பிடிக்கின்றது.

அமெரிக்காவின் பொருளாதாரமே 'சுகவீன' முற்றிருக்கிறது. அதனைச்சுகப்படுத்தியே மற்றதெல்லாம்' என்கிறார் ஜனாதிபதி றீகன்.

அமெரிக்க மக்கள் அவருடைய கடினமான செலவுத்திட்டத்தை காங்கிரஸ் மூலம் நிராகரிக்கின்றனர். பட்ஜெட்டை பாதுகாப்பு விழுங்கி வருகிறது

அடுத்த தேர்தலில் ஆபத்தான நிலையை ஏற்படுத்தக்கூடிய சமூகம், அமெரிக்காவின் தேசியகல்விச்சங்கம் (N E A) மிகப்பிரமாண்டமான பல லட்சம் ஆசிரியர்கள் கொண்ட இச்சங்கம் அமெரிக்காவில் கல்வி வீழ்ச்சியடைந்திருப்பதற்கு ஆசிரியர்களின் தரம், சம்பளம் மதிப்புப் போன்ற விடயங்களை அரசாங்கம் அலட்சியம் செய்ததே முக்கிய காரணமென்று பகிரங்க சவால் விடுகின்றது.

ஜனாதிபதி றீகன் நியமித்த கல்விச்சீர்திருத்த கமிஷன் தனது அறிக்கையில் மத்திய அரசுதனது பொறுப்பில் தவறிவிட்டதென்றும், கல்வித்தரம் குறைந்தற்கு கற்பித்தலின் தரம் குறைந்ததே காரணமென்றும் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறது.

''தகுதிவாய்ந்த திறமைசாலிகளே ஆசிரியத்தொழிலில் இழுத்துவிட அரசு முன்வரவேண்டும். மத்திய அரசு கூடிய நிதி வழங்கி பாடசாலைகளின் தரத்தை உயர்த்தவேண்டும்', என்கிறது அறிக்கை.

ஜப்பானியர் அமெரிக்காவிலும் பார்க்க சிறந்த மோட்டார் வண்டிகளை உற்பத்தி செய்யவும் தென் கொரியாவும் ஜெர்மனியும் அமெரிக்காவை யந்திரத் துறையில் முறியடிக்க முடிந்ததும் கல்வித் துறையில் அமெரிக்கா வீழ்ச்சியடைந்ததே அடிப்படைக் காரணம் என்பது கமிஷனின் தீர்ப்பு.

ஜனாதிபதிக்கு மிகக் கசப்பான செய்தி இது.

கூடியளவிற்கு கல்வித் துறையை அந்தந்த மாநில அரசுகளுக்கு ஒப்படைத்து மத்திய நிதி உதவியை நிறுத்த உத்தேசித்த ஜனாதிபதி இன்று ஆசிரியர்களின் எதிர்ப்பைக் கண்டு கலங்குகின்றார்.

தனிமாணவன் ஒருவனின் திறமை பாதிக்கப்பட்டால் நாடு காலகதியில் சீர்கெடுவதுபற்றி அமெரிக்க பொதுஜன அபிப்பிராயம் வலிமை பெற்றிருக்கிறது; இந்தப் பெரும் நாடு இவ்வாறு சிந்தித்தால் எமது சிறிய நாட்டில் என்ன நடக்கிறது?

எவ்வகையில் பார்த்தாலும் அதிகாரம் விரும்பும் அரசு-ஜனநாயகமோ கம்யூனிசமோ-மக்கள் கருத்தை உதாசீனம் பண்ண முயல்வது கண்கூடு.

பொதுத் தேர்தலில் 'வாலை ஆட்டும்' கட்சிகளும் வேட்பாளர்களும், அதிகாரம் பெற்றதும் மக்களை மறந்தே விடுகின்றனர். அமெரிக்காவில் இது இன்று மட்டுப்படுத்தப்படுகிறது.

அத்துடன் எங்கள் நாடு போல் மிகப்பெரும் 'மெஜாறிற்றி' பெற்று விட்டால் பாராளுமன்றம், எதிர்க்கட்சியை 'இருத்தி எழுப்பும்' விளையாட்டு மைதானமாகிறது.

எனவே மக்களின் சதா விழிப்புணர்வும், அரசியல் கட்சிகளின் ஒத்துக்கரணங்களைக் கண்டிக்கும் அபிப்பிராய பலமுமே ஆட்சியின் தான்தோன்றித் தனத்துக்கு எல்லையிடும் சாதனங்கள்.

# "நமது இளம் சந்ததியினர் பண்பாட்டை பேணவேண்டும்"

## 'ஒறேற்றர்' சுப்பிரமணியம் அறிவுரை

[யாழ்ப்பாணம்]

''மிகவும்நெருக்கடிநிறைந்த காலகட்டத்தில் தான் நமது இளம் சந்ததியினர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அநீதிகள், ஏமாற்றங்கள் குமுறி எழுந்து அமைதியை இழக்கச் செய்கின்றன. கட்டுப்பாடின்றி கலவரங்கள் ஏற்படுகின்றன. இந்நிலையிலும், வழிவழியாக வந்த பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் பேணி ஒழுக்கமுடன் மாணவர்கள் நடந்து கொள்ளவேண்டும். நீதியும், நேர்மையும் ஒழுக்கமும் கட்டுப்பாடும் உள்ளவர்களாக இருக்கவேண்டும். சிறந்த பண்புடைய மக்கள் வாழ்ந்த நாட்டினைத்தான் திருக்குறள் போன்ற அறிவு நூல்கள் எழுதப்பட முடியும், மனிதவாழ்க்கையின் பண்புகளை மிகத்தெளிவாக எமது மொழியான தமிழில் 'குறள்' வள்ளுவனால் எழுதப்பட்டுள்ளது. அவ்விதமான உயர்ந்த எண்ணங்களையும், ஒழுக்க சிந்தனைகளையும் தந்துள்ள மொழிவழிவந்தவர்கள் பண்பைப்பேணி நடக்கத்தவறக்கூடாது.''

இவ்வாறு மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பழம்பெரும் கல்விமானும், சிறந்த பேச்சாளரும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முன்னாள் அதிபருமான ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் பேசுகையில் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு.எஸ். வி. மகேஸ்வரவேலு தலைமை வகித்தார்.

ஒறேற்றர் சுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

### ஒருகாலத்தில் முன்னணியில்

''ஒரு காலத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணத்தில் இன்று பெரிய பாடசாலைகளாகத் திகழும் கல்லூரிகளுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்ததை என்னால் மறக்க முடியாது. இங்கு வருடாந்தம் பதினாறுபோட்டிகளை நிகழ்த்தியவர்கள் இதனைப் பின்பற்றி பல பாடசாலைகள் ஏற்படுத்தின. நானும் ஸ்கந்தாவில் இவ்விதமான போட்டிகளை ஆரம்பித்தேன்

1930ஆம் 31ஆம் ஆண்டுகளில் அகில இலங்கை போட்டிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரி பல சாதனைகளை நிகழ்த்தியதை இங்கு குறிப்பிட்டுச் சொல்லலாம். பல போட்டிகளில் முதலிடங்களைப் பெற்றது. பழைய அதிபரான வீரசிங்கம் அவர்கள் இருந்தகாலத்தில் பாடசாலையின் தரம் மிகப்பெரிய அளவில் ஓங்கி உயர்ந்துநின்றது.

### வெற்றியல்ல பங்கு கொள்வதே முக்கியம்

ஒரு விளையாட்டுப்போட்டியில வெற்றிபெறுவது முக்கியமல்ல வெற்றிக்காக போராடுவதே முக்கியம். அதன் இறுதி முடிவுபற்றி கவலைப்படத் தேவையில்லை. இதேபோன்றே வாழ்க்கையில் பெரியதொரு தத்துவத்தைப்படிக்க நாம் தவறக்கூடாது. வாழ்க்கையில் பிரச்னைகளை எதிர்நோக்கிப் போராடத் தயங்கக் கூடாது அதனின்றுஓடிஒழிக்கக் கூடாது அந்தப்போராட்டத்தில் வெற்றியா தோல்வியா என்பது பிரச்னையல்ல. அஞ்சாது போராடவேண்டும்.

மாணவர்கள் ஒருகஷ்டமான காலத்தில்தான் இப்போது வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் இந்நேரத்திலும், நாம் நமது ஒழுக்கம்போன்ற பண்பாட்டை கைவிடாது, சிறந்த மாணவர்களாக லட்சியத்தோடு வாழப்பழகிக்கொள்ள வேண்டும் விளையாட்டுக்களில் பங்குகொண்டு சாதனைகள் நிகழ்த்துவதுபோல, படிப்பிலும் சாதனைகள் நிலைநாட்ட வேண்டும் எதற்கும் கடும் உழைப்பைக் கைக்கொள்ள வேண்டும்.

''மஸ்கன்ஸ் நிறுவனம் அன்பளித்த தொழில்நுட்பக்கூடத்தைப் பயன்படுத்தி மாணவர்களின் தொழில்நுட்ப அறிவை வளர்க்க நடவடிகைகள் எடுக்கவேண்டும்.

அதிபர் திரு எஸ். வி. மகேசவேலு தமது தலைமையுரையில், பிரதம விருந்தினர் ஒறேற்றருக்கு பாடசாலை சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். பாடசாலையை மேலும் நன்நிலைக்குக் கொண்டுவர, ஆசிரியர் மாணவர்கள் பழைய மாணவர்கள், பெற்றோர் ஒத்துழைப்போடு ஆவன செய்வேன் என்று உறுதியளித்தார்

நான்கு இல்லங்களுக்கிடையே நடந்த போட்டியில் சுப்பிரமணிய இல்லம் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

வெற்றி வீரர்களுக்கு திருமதி ஒறேற்றர் சுப்பிரமணியம் பரிசில்களை வழங்கினார்.

## 'தமிழ்ஈழ தேசிய மன்றம் அமைத்து விடுதலைப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம்"

### கூட்டணிக் கிளை தீர்மானம்

[சாவகச்சேரி]

தமிழர் விடுதலைக் கூட்டணி மன்னாரில் நடைபெறவுள்ள மாநில மாநாட்டினை அடுத்து உடனடியாகத் தமிழ் ஈழத் தேசிய மன்றத்தினை அமைத்து, தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்லவேண்டும், நுணாவில் மேற்கு தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளை அதன் தலைவர் திரு. வி. க. துரைராஜா தலைமையில் நடைபெற்றபோது ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

மேலும் இக்கிளை எடுத்த தீர்மானங்கள் பின்வருமாறு:-

(5-ம் பக்கம் பார்க்க)

# சைவப் பெருமக்களுக்கு பேரதிர்ச்சி தரும் இழப்பு!

## ராமநாதக்குருக்கள் மறைவு: பேராசிரியர் இரங்கல்

[யாழ்ப்பாணம்]

இணுவில் இராமநாத குருக்கள் மறைவு குறித்து யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை நுண்கலைத்துறையின் தலைவர் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

இணுவிலை உறைவிடமாகக் கொண்டு, தனக்குரிய சிறப்பான முறையில் தலைசிறந்த சிவாசாரியராக நெடுங்காலமாகத் திகழ்ந்து வந்த குருமணி கு. இராமநாத குருக்கள் திடீரென காலமான செய்தி ஈழத்துச் சைவப் பெருமக்களுக்கு நடுநடுங்கித் திடுக்கிடும் பேரதிர்ச்சியைத் தந்துள்ளது.

தலைசிறந்த சிவாசாரியரை ஆசாரசீலரை பிராமணோத்தமரை கிரியைகளை முறைவழுவாது நிகழ்த்தும் இயல்பினரான சைவக் குருமணியை சதா புன்னகைத் தவழும் முகத்துடன் இனிமையாகப் பேசும் சுபாவமுடையவரை முன்னேச்சுரம் சிவஸ்ரீ மு. சோமாஸ்கந்தகுருக்கள் பாரம்பரியத்தைப் பெருமையுடன் பேணிவந்த சிவாசாரியப் பெருமானை இழந்து நிற்கும் சிவாசாரியர் கிராமம் தவிக்கிறது. நீத வழிகாட்டியைப் பறிகொடுத்துத் தவித்து நிற்கின்றது. இப்பேரிழப்பை தாங்க முடியாது தவித்து நிற்கும் துர்ப்பாக்கியம் அவருக்குற்றவினருக்கு மட்டுமல்ல இவரின் நிலையையும் கடந்த வகையில் அவருடன் அளவளாவிப் பழகிய என்னைச் செய்வதறியாது திகைத்து நிற்கும் நிலையில் நிற்கவைத்துள்ளது இப்பெருமகனாரது மறைவு எமக்கு ஈடு செய்ய முடியாத பெரும் நஷ்டம்.

## "அறிவு வளர்ச்சிக்கு உதவும் நூல் நிலையங்கள்"

(பண்டத்தரிப்பு)

''மாணவர்களின் அறிவு விருத்திக்கு நூல் நிலையங்கள் சிறந்த சாதனங்களாக அமைகின்றன. ஆகவே பாடசாலைகள் தோறும் இயங்கும் நூல் நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும் வட்டுக்கோட்டைத் தொழிகுதியிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் நூல்நிலைய வளர்ச்சி மிகவும் மந்தநிலையில் இருப்பதை அவதானித்துள்ளேன் இந்நிலையில் ஆசிய பவுண்டேசன் நிறுவனம் வழங்கியுள்ள பெறுமதிமிக்க நூல்களை இக்கல்லூரிக்கு அன்பளிப்பு செய்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வாறு வட்டுக்கோட்

[5ம் பக்கம் பார்க்க]

# "உணர்ச்சி வேகத்தில் நாம் எதையும் செய்யக்கூடாது"

## விளைவுகளைச் சிந்தித்துச் செயற்படவேண்டும்"

### காங்கேசன்துறையில் அமிர்தலிங்கம்

(மாவிட்டபுரம்)

"எமது பலம் குறைந்த இடத்தில் எமது மக்களைக் காப்பாற்றித்தான் பலம் கூடிய இடத்தில் செயற்படவேண்டும். இங்கே எமக்குப் பலமுண்டு என நினைத்து செயற்பட்டால் பலம் குறைந்த பகுதியிலுள்ள எமது மக்கள் பாதிப்புக்குள்ளாக நேரிடும். ஆகவே நாம் எதையும் சிந்தித்து விளைவுகளை ஆராய்ந்தே செய்யவேண்டும்; உணர்ச்சி வேகத்தில் எதையும் செய்யக் கூடாது"

இவ்வாறு காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூகநிலைய படிப்பக திறப்பு விழாவில் கலந்து படிப்பகத்தை திறந்து வைத்துப் பேசிய எதிர்க்கட்சி முதல்வரும் காங்கேசன்துறை எம். பியுமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்

மருத்துவகலாநிதி திரு. க. கதிரவேலு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை சட்டத்தரணி வி. குமரகுரு மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார். யாழ் அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு என். இராஜேந்திரம் நிலையக் கொடியை ஏற்றிவைத்தார்.

இவ்விழாவில் திரு அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

திருமலை சம்பவங்களை பார்க்கும்போது நமது மக்கள் தாம் வாழ்ந்த பகுதியிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ளனர். வீடுகள், உடமைகள், உயிர்கள் போன்று பலவற்றையும் இழந்து நிர்க்கதியாகியுள்ளனர். இதுபற்றி ஜனாதிபதியிடம் நான் எடுத்துக்கூறிய சமயம் அவர் இருதரப்பின ருமே மோதுவதுபோன்ற வகையில் தமக்கு அறிக்கைகள் கிடைப்பதாககூறினார். இதனையடுத்தே நான் நேரில் திருமலை சென்று நிலைமையை பார்வையிட்டு அங்கு தமிழ்மக்களே பாதிக்கப்படுகின்றார்கள் என்ற விபரத்தை அவரிடம் எடுத்துக்கூறி அதனைத் தடுத்து நிறுத்துமாறு கோரியுள்ளேன். என்னை திருமலைக்கு வரவேண்டாம். வந்தால் எமது மக்கள் வேலும் பாதிப்புக்குள்ளாக நேரிடும் என்று கூறி திருமலை எம். பியும் மற்றவர்களும் பல தடவை தடுத்தனர். இறுதியில் பொறுக்க முடியாமலேயே அங்கு சென்றேன்.

### நேர்வழியில் நடக்கிறோம்

"நாம் மக்கள் தந்த பொறுப்பை சுமந்து நிற்கிறோம். எமது மனசாட்சிப்படி செயல்படுகிறோம். தமிழ் மக்களது நல்வாழ்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ளோம். எம்மைப் பற்றி யார் குறைகூறினாலும் அதைப்பற்றி கவலையில்லை. நாம் நேர்வழியில் நடக்கிறோம்; எதற்கும் தயாராகவே செயல்பட்டுவருகிறோம்.

தீவிரவாதிகள் என்று கூறுவோர் அழிவுவேண்டும் என்கிறார்கள். மக்கள் தாங்கக்கூடிய அளவு அழிவையே நாம் எதிர்பார்க்கவேண்டும். ஓர் படைத்தளபதி தமது தரப்பின் சேதத்தை எவ்வளவு தூரம் குறைக்கலாம் என்று நினைத்து செயல்படுவதைப் போல நாம் செயல்படவேண்டும். தேவையேற்பட்டால் அழிவை எதிர்நோக்க வேண்டுமே தவிர அறிவற்ற செயல்களால் நாமாகவே அழிவை தேடுவது கூடாது. அறிவற்ற செயலால் தேடப்படும் அழிவு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல உதவாது. விடுதலைப் போராட்ட அழிவை தாங்குவது வேறு. ஆகவே உணர்ச்சிவசப்பட்டு செயல்படாமல் அறிவினால் எமது உணர்ச்சிகளை வழி நடத்திச் செல்லவேண்டும். அதுவே எமது பாதையில் முன்னேற ஒரே வழி. அல்லது விட்டால் அழிவைத்தான் தேட முடியும். ஆகவே எல்லாம் இதுபற்றி சிந்தித்து செயல் புரியவேண்டும். குழப்பமடையாமல் எமது இயக்கத்தின்கீழ் ஒன்றுபட்டு செயல்படவேண்டும்" என்றார்.

### துன்பம் நிரந்தரமல்ல

முன்னாள் கம்யூனிஸ்டும், இந்நாள் செந்தமிழர் இயக்கத் தலைவருமான திரு. வ. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:

எமது இனம் வாழ்வதற்கு நிரந்தர வழிவகைகளை எத்தனை துன்பம் வந்தாலும் நாம் மேற்கொள்ளவேண்டும். துன்பம் நிரந்தரமல்ல எமது மக்களது வாழ்வு நிரந்தரமானது. வெளிநாடுகளில் இடம்பெறுவது போன்ற துன்பத்தை நாம் இன்னும் எதிர் நோக்கவில்லை. ஆனால் இன்னும் துன்பங்களை எதிர் நோக்க இடமுண்டு என்பதையும் மறுக்கமுடியாது. தனித்துவமான எமது இனத்தின் நிலையான வாழ்வுக்கு நாம் வழி சமைக்கவேண்டும்.

விடுதலைக்காக நாம் போராடிக்கொண்டிருக்கிறோம். விடுதலைக்கு இன்னும் பல மைல் தூரத்தை கடக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் நாமே நமக்குள் முட்டி மோதுகிறோம். மகாத்மா தலைமையில் பல இயக்கங்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இந்திய காங்கிரசுடன் இணைந்து செயல்பட்டதைப் போல நாமும் ஒற்றுமையாக ஒரே இயக்கத்தில் சேர்ந்து உழைக்கவேண்டும். இயக்கத்தில் தவறு இருந்தால் உள்ளேயிருந்து சுட்டிக்காட்டி அதன் போக்கை மாற்றலாம். தலைவர்களில் பிழை இருந்தால் அதை எடுத்துக் கூறி திருத்தலாம். அதை விடுத்து வீண் வாதங்கள், பொய்ப்பிரசாரங்கள்மூலம் எமது மக்களை கூறுபோடுவது கூடாது" என்றார்.

மற்றும் யாழ். அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா, அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் திரு ந. இராசேந்திரம், திரு. ச. நடேசு, காங்கேசன்துறை மகாவித்தியாலய அதிபர் திரு. வேலாயுதம், வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் திரு எஸ். சிவமகாராஜா உட்படப் பலர் பேசினர்.

---

# பிரபாகரன் சகோதரியின் வீடு தீக்கிரை!

(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட இயக்கத்தின் தலைவரான பிரபாகரனின் சகோதரி திருமதி ஆர். பாலசுந்தரத்தின் எந்தலையிலுள்ள வீடு தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றுள்ள இச்சம்பவம் பற்றி திரு பிரபாகரனின் மைத்துனரும் கணக்காளருமான திரு. பாலசுந்தரம் பொலிசில் புகார் செய்துள்ளார். எந்தலையில் அக்விஸ் நகரிலுள்ள தமது வீட்டின் மீது காடையர் கூட்டம் ஒன்று தாக்குதல் நடத்தியதாகவும் பின்னர் வீட்டுக்குத் தீவைத்ததாகவும் அவர் புகார் செய்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் இரகசியப் பொலிசார் எந்தலையிலுள்ள இந்த வீட்டில் உள்ளவர்களை விசாரித்ததாகவும் மேல்விசாரணைக்காக பொலிஸ் நிலையம் வரும்படி அறிவுறுத்தியிருந்ததாகவும் கூறப்படுகின்றது. வத்தளைப் பொலிஸ் பொறுப்பதிகாரி நாடியாரின் தலைமையில் விசாரணைகள் நடைபெறுகின்றன

---

## நெசவாலை நிறுவ நிதி ஒதுக்கீடு

[பண்டத்தரிப்பு]

சித்தங்கேணி திருவள்ளுவர் நெசவாளர் கூட்டுறவுச்சங்க நெசவாலைக்குக் காணியொன்றை கவீகரிப்பதற்காக வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 15 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

---

## சிரமதானம்

(சரவெட்டி)

இளையாணன் கிராமோதய சபை இளையாணன் அ. த. க. பாடசாலையில் இம் மாதம் 9ந் திகதி சிரமதானப்பணியொன்றினை மேற்கொள்ளவுள்ளது.

கிராமோதய சபைத்தலைவர் திரு க. அப்புக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ள இச் சிரமதானத்திற்கான ஒழுங்குகளை செயலாளர் திரு செ. செல்வநாதன் மேற்கொண்டுள்ளார்.

---

## யாழ். ரயில் நிலையத்தில் எரிந்த யாழ். தேவி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் புகையிரத நிலையத்தில் வைத்து தீயிட்டு எரிக்கப்பட்ட யாழ் தேவி ரயிலின் 10 பெட்டிகளும் யாழ். புகையிரத நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இப்பெட்டிகள் கொழும்புக்கு கொண்டு செல்லப்படவுள்ளன.

யாழ் தேவி எஞ்ஜின் கொழும்பு கொண்டு செல்லப்பட்டுளது

காங்கேசன்துறை கொழும்பு புகையிரத சேவை மட்டுமல்ல வடபகுதியுடனான எந்த ரயில்சேவைகளும் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நடைபெறவில்லை.

நேற்றுமுன்தினம் மாத்திரம் எரிபொருள் தாங்கிய ரயில் யாழ்ப்பாணம் வரை வந்து திரும்பியது.

மறு அறிவித்தல் வரை எதுவித ரயில்சேவைகளும் நடைபெறமாட்டாதென புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது. (மா)

---

# "அளவுக்குமீறிப் பிள்ளைகளை கஷ்டப்படுத்தக் கூடாது"

## நடேஸ்வரா கல்லூரி அதிபர் பேச்சு

(மாவிட்டபுரம்)

பல்கலைக்கழகம் புகும் நோக்குடன் கடும் போட்டிப் பரீட்சைக்குத் தம்மைத் தயார் செய்யும் இன்றைய மாணவர் ஓய்வு ஒழிவு இன்றி பாடசாலைகளுக்கும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் ஓடி அலைந்து திரிகின்றனர் தமது பிள்ளைகள் பல்கலைக்கழகம் புகவேண்டும் என்றபேரவாவினால் உந்தப்பட்டு பெற்றோர்கள் சிறுவயதிலிருந்தே பிள்ளைகளை இவ்வாறு அலைந்தெடுக்கின்றனர். இதனால் பிள்ளைகளின் உடல்நலம் பெரிதும் பாதிக்கப்படுகிறது என்பதை அவர்கள் உணரத் தவறிவிடுகின்றனர் ஆரோக்கியமான உடல் இருந்தால்தான் உள்ளமும் ஆரோக்கியமும் இருக்கும். உடல் உளவளம் இருக்கும்போது தான் தாம் பெறும் கல்வியறிவைக் கிரகிக்கவோ ஜீரணிக்கவோ முடியும். பரீட்சைகளிலும் இலகுவாகச் சித்தியடைய இயலும். மாத்திரம் பழுதடைந்தால் அதனால் எதனையும் கொள்ள முடியாது. எனவே மாணவர்கள் தமது தேக ஆரோக்கியத்தைப் பேணிக்காப்பது அவசியமாகின்றது இந்த நோக்குடனேயே பாடசாலைகளில் உடற்பயிற்சி, இல்ல மெய்வல்லுநர் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் என்பன எமது நெறியில் ஓர் இன்றியமையாத அம்சமாக இடம்பெறுகின்றன"

இவ்வாறு காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டிக்குத் தலைமை வகித்து உரையாற்றிய கல்லூரி அதிபர் திரு து. பாலசிங்கம் கூறினார்.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கல்வியதிகாரி திரு. சி இராசராசா ஒரு காலத்தில் சுவட்டு நிகழ்ச்சிகளில் சிறந்து விளங்கிய யாழ்ப்பாணப் பாடசாலைகள் மீண்டும் அந்த நிலையை அடைய முயலவேண்டும் என்று கூறினார். நடேஸ்வராக் கல்லூரி விளையாட்டுத் துறையில் முன்னணியில் விளங்கி வருவதைப் பாராட்டிப் பேசிய கல்வியதிகாரி இக்கல்லூரியின் முன்னைய சாதனைகளையும் நினைவு கூர்ந்தார்

இல்ல மெய்வல்லுனர்போட்டியில் முதலிடத்தைப்பெற்று இளங்கோ இல்லம் வெற்றிக்கேடயத்தைத் தட்டிக் கொண்டது.

### அறிவு வளர்ச்சி ..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. கலாநிதி நீலன் திருச்செல்வம் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற நூல் அன்பளிப்புச் செய்யும் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் திருமதி மு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில், ஆசிய பவுண்டேசன் நிறுவனம் அன்பளிப்பு செய்த விலை உயர்ந்த மருத்துவ, விஞ்ஞான, ஆங்கில துறைகளைச் சேர்ந்த நூல்களை வட்டுக்கோட்டை எம். பி கலாநிதி நீலன் திருச்செல்வம் திருமதி சுப்பிரமணியத்திடம் கையளித்தார்

கலாநிதி நீலன் திருச்செல்வம் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது. பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறும் மாணவர்களுக்கு பாடசாலைக் கல்வி மாத்திரம் போதாது. நூல்நிலையப்பயிற்சியும்தேவை சர்வதேச மொழிகளிலும் எமது மாணவர்கள் விசேட பயிற்சிபெறவேண்டும். நான் சில வருடங்களுக்கு முன்னர் சோவியத் ரஷ்யாவுக்கு சென்றிருந்தபோது அங்கு புலமைப் பரிசில் பெற்று பல்கலைக் கழகக் கல்வி பயின்ற பல இலங்கை மாணவர்களை சந்திக்க நேர்ந்தது அவர்களில் பெரும்பாலோருக்கு ஆங்கில மொழி அறிவு அறவே இல்லாதிருந்ததை அவதானித்து ஆச்சரியப்பட்டேன். ஆனால் இந்த மாணவர்கள் ரஷ்ய மொழியில் அதிக தேர்ச்சி பெற்றிருந்தார்கள் அந்நாட்டில் மொழியறிய கட்புல செவிப்புல சாதனங்கள் மூலம் புகட்டுவதே இதற்கு காரணம் என்று அறிந்தேன் கற்பித்தலுக்கு அவசியமான கட்புல செவிப்புல சாதனங்களை எமது தொகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு கிடைக்க ஏற்றன நடவடிக்கை எடுத்திருக்கிறேன். வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள ஒரே ஒரு மகளிர் கல்லூரியான இக்கல்லூரியின் தேவைகளை நிறைவேறவும், இக்கல்லூரியை அபிவிருத்தி செய்யவும் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுவேன் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்."

புலவர் ஈ. வேலுமுருகன், ஆசிரியர் திரு. சி நடராசா ஆகியோரும் உரையாற்றினார்கள்.

---

## நடேஸ்வரா பரிசளிப்பு விழா இன்று

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் விழாவும் இன்று பிற்பகல் நடைபெறுகிறது.

கல்லூரிஅதிபர் திரு து.பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வடமாநிலக்கல்விப்பணிப்பாளர் திரு வ. சிவராமலிங்கம்பிள்ளையும் திருமதி ஜெயமணி சிவராமலிங்கம்பிள்ளையும் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். இக்கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபருமான திரு க பரஞ்சோதி நிறுவுநர் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

(அ)

---

### விடுதலைப் ..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

● பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும்-அச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டவர்களையும் அரசு உடனடியாக விடுதலை செய்யக்கோரி தமிழர் விடுதலைக் கூட்டணி, தொழிற்சங்கள் ஆகியவை வழிப்போராட்டங்களை நடாத்த வேண்டும்.

● தமிழ் ஈழ விடுதலைக்காகப் போராடுகின்ற ஏனைய சார்பு இயக்கங்களை ஒன்று சேர்க்கவேண்டும்.

---

## காங்கேசனில் சுகாதார வாரம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இம்மாதம் 9-ம் திகதி வரை சுகாதார வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கடந்த 4-ம் திகதி ஆரம்பமாகிய இந்த சுகாதாரவாரம் 9-ம் திகதி வரை அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதையொட்டி பாடசாலைகளில் சுகாதார கண்காட்சி, படக்காட்சி, கருத்தரங்கு ஆகியன இடம்பெற்றுவருகின்றன.

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி திரு இ. தெய்வேந்திரன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

# சாத்வீகப் போராட்டங்களை கூட்டணி நடத்த வேண்டும்

## சாவகச்சேரிக்கிளை தீர்மானம்

(சாவகச்சேரி)

"விடுதலை இயக்கத்தில் பணிபுரிபவர்கள் எல்லோரும் ஒருவரை ஒருவர் மதித்து — நம்பிக்கை வைத்து ஒற்றுமையாக இணைவதன் மூலமே விடுதலைப் பயணத்தை முன்னெடுத்துச்செல்ல முடியும். இதனடிப்படையில் 1977ம் ஆண்டு காலப்பகுதியில் தமிழர் விடுதலைக்கூட்டணியில் இருந்த அத்தனைபேரையும் மீண்டும் ஒன்றுசேர்த்து ஒரு கொடியின் கீழ் அணிதிரளச் செய்ய தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநிலமாநாடு வழிவகைசெய்யவேண்டும்".

இவ்வாறு கோரும் தீர்மானத்தினை சாவகச்சேரித் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை ஏகமனதாக எடுத்துள்ளது.

மூலக்கிளைகளால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளை ஆராய்ந்த பொதுச்சபை பின்வரும் தீர்மானங்களையும் நிறைவேற்றியுள்ளது.

0 ஒரு இனத்தின் விடுதலை வெறுமனே அரசியல் மாற்றத்தினால் மட்டும் முழுமை பெறுவதில்லை. இன்று தமிழ் சமுதாயத்தில் இருக்கின்ற சமூகக் குறைபாடுகள் நீக்கப்பட்டு, தமிழ்மக்கள் எல்லோரும் சமூக, சகோதரத்துவத்துடன் வாழச்செய்யவேண்டியதற்கான சகலவிதமான நடவடிக்கைகளையும் காலக்கெடு அமைத்து இப் பிரச்னைக்குத் தீர்வுகாணவேண்டும்.

0 தமிழ்ஈழத்தில் இன்று பயங்கரவாதத்தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் போன்ற சட்டங்கள் அமுல்செய்யப்பட்டு தமிழ்மக்கள் அநியாயமாகத் தாக்கப்படுவதையும் கைதுசெய்யப்படுவதையும் உடன் நிறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் எனவும் இச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட சகலரையும் விடுதலைசெய்யக்கோரி தொகுதிரீதியாக மக்கள் சக்தியைத் திரட்டி தமிழர் விடுதலைக் கூட்டணி சாத்வீகப் போராட்டங்களை நடாத்தல் வேண்டும்.

# ★ கச்சேரியடியில் நேற்றுக்காலை மலைவேம்பு வீதியில் விழுந்து 2பேர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை

## ஒருவர் உயிருக்காகப் போராடுகிறார்

(கல்வியங்காடு)

யாழ். செயலகமும் யாழ் வை. எம். சி. ஏயும் அமைந்துள்ள முற்சந்தியில் நின்ற மாபெரும் மலைவேம்பு அடியுடன் சாய்ந்து வீழ்ந்ததால் கச்சேரி சிறுகைத்தொழில் பகுதியில் வேலை செய்யும் கே. ஜெயராசா (39 வயது) என்பவர் படுகாயமடைந்து மிகவும் ஆபத்தான நிலையில் யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கல்வியங்காட்டைச் சேர்ந்த யாழ். பரியோவான் கல்லூரி மாணவன் செ. தயாபரன் (16 வயது) கைமுறிந்தநிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கே. ஜெயராசாவுக்கு உடன் சத்திரசிகிச்சை நடைபெற்றது. தயாபரனும் சத்திரசிகிச்சையின் பின் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருக்கு ஆபத்து இல்லை; எனினும் தயாபரன் பாடசாலைக்கு வந்துகொண்டிருந்த சைக்கிள் வண்டி மரத்தின் அடியில் அகப்பட்டு நசுங்கிய நிலையில் உள்ளது.

நேற்றுக்காலை 8-10 மணி பள்ளிப் பாடசாலை மாணவர்கள் வேலைத்தலங்களுக்கு மக்கள் செல்லும் மிகவும் நெரிசலான வேளையில் இம்மரம் முறிந்து வீழ்ந்துள்ளது. எனினும் பல மாணவர்கள் ஆபத்தின்றித் தப்பினர். மிகப் பலத்த சப்தத்துடன் மரம் வீழ்ந்தபோது இவ்விடத்தில் நின்ற அனைவரும் திகிலடைந்துவிட்டனராம்.

'மலைவேம்பின் அடிப்பாகத்தின் உட்புறம் உழுத்துப் போனதினால்தான் திடீரென இம் மரம் முறிந்து வீழ்ந்துள்ளது எனத் தெரிகிறது.

மரம் முறிந்து வீழ்ந்ததினால் கச்சேரி சந்தியில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. எனினும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வந்து பாதையை சீராக்க ஆவனசெய்தனர். முன்பு ஒருமுறை பழைய பூங்கா வீதியிலும் இத்தகைய மரம் வீழ்ந்த சமயம் இவ்வித மரங்கள் பற்றிக் கவனம் எடுக்கும்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு முன்கூட்டியே அறிவித்திருந்ததாக வை. எம். சி. ஏ. யினர் தெரிவித்துள்ளனர்.

# பிள்ளைகளின் நற்பண்புகளில் கவனம் செலுத்த வேண்டும்

## பெற்றோருக்கு கல்வி அதிகாரி வேண்டுகோள்

(மாவிட்டபுரம்)

"தமது பிள்ளைகளின் ஒழுக்கம், நற்பண்புகள் ஆகியன தொடர்பாக பெற்றோர்கள் முழுமையாக பாடசாலைகளையும் பாடசாலை ஆசிரியர்களையுமே நம்புகின்ற நிலை இன்றைய சமூகத்தில் இருந்து வருகிறது. மாணவர்கள் பாடசாலையில் மிகக் குறைந்த நேரமே இருக்கிறார்கள். வீடுகளிலேயே அதிக நேரம் இருக்கிறார்கள். ஆகவே பெற்றோர் தமது பிள்ளைகளின் நற்பண்புகள் குறித்து அதிக கவனம் எடுக்க வேண்டும்."

இவ்வாறு அளவெட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழாவிலும் பெற்றோர் தின விழாவிலும் பிரதம அதிதியாகக் கலந்துரையாற்றிய வட மாநிலக் கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி திரு சி. தியாகராஜா கூறினார்.

பாடசாலை அதிபர் திரு மு. மாணிக்கம் தலைமையில் நடந்த இவ்விழாவில் திருமதி யசோதா தியாகராஜா பரிசில்கள் வழங்கினார்.

ஒழுக்கத்தில் அதி சிறந்த மாணவனுக்கென சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு அவரது தந்தையார் ஞாபகார்த்தமாக வழங்கிய வெள்ளிப்பதக்கத்தை செல்வன் வி. பாலமுரளீதரனுக்கு திருமதி தியாகராஜா வழங்கினார்.

ஒழுக்கத்தில் அதி சிறந்த மாணவிக்குரிய வெள்ளிப்பதக்கத்தை செல்வி இ. சந்திரவதனிக்கு முன்னாள் உதவி அரசாங்க அதிபர் திரு சோ. அருணாசலம் வழங்கினார். இதனை அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம் வழங்கியிருந்தது.

# ★ டாக்டர், கோவை கைது: தமிழீழ விடுதலை அணி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

திருமலையில் இடம்பெறும் வன்செயல்களைக் கண்டித்து முற்றிலும் சாத்வீக அடிப்படையில் ஹர்த்தாலை நடாத்தக்கோரிய தமிழீழ விடுதலை அணியின் தலைவர் டாக்டர் தருமலிங்கம் செயலாளர் நாயகம் கோவை மகேசன் ஆகியோரை கைதுசெய்தது முற்றிலும் ஜனநாயகத்திற்கு விரோதமான செயலாகும்.

தமிழீழவிடுதலை அணிதுணைச் செயலாளர் திரு. ச. செந்தூர்ராசா வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்நடவடிக்கையை தமிழீழ விடுதலை அணி வன்மையாக கண்டிப்பதுடன், உடனடியாக தலைவர்களை விடுதலை செய்யுமாறும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஊ)

# திருமலைச் சம்பவங்கள்: நவ. ச. ச. கட்சிகண்டனம்

[கொழும்பு]

ஏராளமான ஆயுதப்படைகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அதேவேளையில் வன்செயல்கள் திருகோணமலையில் தொடர்ந்து நடைபெற்றிருப்பதானது, தமிழ்மக்களுக்கு எதிராக நடைபெற்றுவரும் இந்தப் பயங்கரச்செயல்களில் அரசின் கைகள் மறைமுகமாகச் செயல்பட்டுவருவதையே காட்டுகிறது.

இவ்வாறு நவசமசமாஜக்கட்சிப் பொதுச்செயலாளர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்தின விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறியிருக்கிறார்.

சர்வதேச நாணயசபையின் நிபந்தனைகளுக்கு இணங்க முடியாதநிலையில் திரு. ஜயவர்த்தனாவும் யு. என். பி. தலைவர்களும் வேறுவழிகளைப் பிரயோகித்தும் பலம்வாய்ந்த சர்வாதிகாரத்தை நிலைநாட்டப் பார்க்கிறார்கள் என்று அவ்வறிக்கை கூறுகின்றது.

அரசாங்கசார்பு பாசிஸவாதிகளின் சதித்திட்டங்களை முறியடிக்க தொழிலாளவர்க்கமும் இடதுசாரி சக்திகளும் ஒன்றுபடவேண்டும் என்று டாக்டர் கருணாரத்தின அழைப்பு விடுத்துள்ளார்.

# கலாநிதி கந்தையாவுக்கு மற்றொரு புதிய பதவி

[கொழும்பு]

திறந்தவெளி பல்கலைக்கழக டைரக்டரான கலாநிதி ஆ. கந்தையாவுக்கு மற்றொரு உயர்பதவி வழங்கப்பட்டுள்ளது. கல்விச்சேவை கமிஷனில் அங்கத்தவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். சட்டத்தரணி ஆ. எம். சுவாமிநாதன் இப்பதவியிலிருந்து ராஜினாமாச்செய்ததையடுத்து இவர் இந்த நியமனத்தைப் பெற்றுள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகராகவும் இவர் சமீபத்தில் நியமிக்கப்பட்டிருந்தார்.

தமிழ் அறிஞரான கலாநிதி கந்தையா, பல தமிழ்நூல்களை எழுதியுள்ளார். சிறந்த சொற்பொழிவாளர்.

ஜனாதிபதியின் சொற்பொழிவுகளை பொதுமேடைகளிலும், டி. வி. யிலும் தமிழில் மொழிபெயர்க்கும் பணியையும் இவரே செய்துவருகிறார்

# பாத்திரங்கள் கையளிப்பு

(கரவெட்டி)

கரவெட்டிமேற்குகன்பொல்லையில் தீக்கிரையானவீடுகளைச் சேர்ந்த பதினைறு குடும்பத்திற்கும் கட்டைவேலி, நெல்லியடி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் நாளாந்தப்பாவனைக்குரிய வீட்டுப் பாத்திரங்களை வழங்கியுள்ளது.

# யாழ். கம்யூனிஸ்ட் பிரமுகர் விசாரிக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கம்யூனிஸ் கட்சிக் யாழ். மாவட்ட செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் பொலிஸாரினால் விசாரிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவும் நேற்றுக் காலையும் இவர் விசாரிக்கப்பட்டு. இவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது

கந்தரோடையிலுள்ள இவரது இல்லத்துக்குச் சுன்னாகம் பொலிஸார் சென்று இவரை விசாரணைக்காக வரும்படி கேட்டுக்கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு 8 மணி முதல் இரவு 11 மணிவரை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் வைத்து, சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரியினால் விசாரிக்கப்பட்டார்!

நேற்றுக் காலையும் இவர் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரிக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

சமீபகாலமாக வடபகுதியில் நடந்துவரும் சம்பவங்களுக்கும், இடதுசாரி இயக்கங்களுக்குமிடையில் தொடர்பு இருக்கிறதா என்பது குறித்து விசாரிக்கப்பட்டார்.

# குடிதண்ணீர் பிரச்னை நீங்கும்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயத்தில் நீண்டகாலமாக நிலவும் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்குமுகமாக புதிய கிணறு ஒன்றை அமைப்பதற்கு 25 ஆயிரம் ரூபாவை இவ் வருடத்திற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் வட்டுக்கோட்டைத் தொகுதி எம்.பி கலாநிதி நீலன் திருச்செல்வம் ஒதுக்கீடு செய்துள்ளார்.


ஹோம் பிஞன்ஸ் லிமிட்டெட்

உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8 - 30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7 - 45 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம்பிஞன்ஸ் லிமிட்டெட்.
இல: 82, கன்ஞதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்;
போன்! 22370—22438—22537

(3) யாழ்மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி;
தொலை பேசி இல: 22278. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பிஞன்ஸ் லிமிட்டெட்
இல: 468, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல. 105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல: 22830


(4) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல: 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல: 88866

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம்.ஜி.ஆர்—ஜெயலலிதா
நீரும் நெருப்பும்
(ஈஸ்ட்மன் கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 4-15 7-00
சனி, ஞாயிறு 1-30
ஜெய்சங்கர்
துணிவே துணை
(புதிய பிரதி)

கடைசி 5 தினங்கள்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி - விஜயா
ஜெமினி - சாவித்திரி
சரஸ்வதிசபதம்
(ஈஸ்மன்ட் கலர்)
12-7-83 முதல்
பாக்கியராஜ் நடித்த
அந்த ஏழு நாட்கள்

Regal (Jaffna)
Daily 10-30, 2 30
4-45,7-00
6th to 8th
Bud Spencer in
THEY CALLED HIM
BULLDOZER
(Action-comedy-color)
From 9-7-83
'GIRL FROM INDIA'



வேலணையில் மிகப் பழமை வாய்ந்த ஆலயங்களில் ஒன்றான வேலணை கிழக்கு உரப்புலம் ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயம் புதிதாக புனரமைக்கப்பட்டு வருகிறது. இவ்வாலயத்தின் பழைய தோற்றத்தையும், புதிதாக கட்டப்பட்டு வரும் இவ்வாலயத்தின் மூலஸ்தான தோற்றத்தையும் இப்படத்தில் காண்க.

—படம்: (வணி-திரு.)

ஜூரிசபையினர் முன்நடந்த

# கொலை முயற்சி வழக்கில் இரு கிளர்ச்சிக்காரர் விடுதலை!

(கொழும்பு)

கம்பஹம் பேகம் ஜூரி சபை முன்னிலையில் 5 தினங்கள் நடைபெற்ற கொலை முயற்சி வழக்கில் 1971-ம் ஆண்டு கிளர்ச்சிக்காரர் இருவர் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு கேகாலை மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எம். ஐ. எம். ஜமீல் முன்னிலையில் நடைபெற்றது. விசாரணை முடிவில் ஜூரி சபையினர், எதிரிகள் சுற்றவாளிகள் என ஏகமனதாக தீர்ப்பளித்ததை தொடர்ந்து விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கில் 1971-ம் ஆண்டு மே 3-ம் திகதி இரவு ரம்புக்கணையை சேர்ந்த ஜி. ஜி விஜயசிங்காவை சுட்டுக் கொலை செய்ய முயற்சித்ததாக டபிள்யு ஜி பியதாச, எம். ஜி முனசிங்க ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) சட்டத்தரணி க. வி. காமினி ஹெராத், சுணில் தயாரத்ன ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசு தரப்பில் அரச சட்டத்தரணி ஹர்ச கமலத் ஆஜரானார்.

1-ம் எதிரி பியதாச சாட்சியமளிக்கையில், தான் ஒரு கிளர்ச்சிகாரன் என்றும் கிறிமனல் ஜஸ்டிஸ் கமிஷன் முன்னிலையில் நடந்த விசாரணையில் குற்றத்தை ஒப்புக் கொண்டபோது 8 வருடக் கடூழிய சிறைத்தண்டனை கிடைத்ததாகவும் அந்த 8 வருட சிறைத்தண்டனையை தான் அனுபவித்த போதிலும், அன்றிரவு தான் முனசிங்காவை சந்திக்கவில்லை என்றும் கூறினார். வாழ்வில் ஒரு லட்சியத்தை கொண்ட கிளர்ச்சிகாரன் என்ற ரீதியில் விஜயசிங்காவை சுட்டிருந்தால் அதனையும் ஒப்புக் கொண்டிருப்பேன் என்றும் கூறினார்.

2-ம் எதிரி சாட்சியமளிக்கையில், தான் ஒரு கிளர்ச்சிகாரரென்றும், தமக்கெதிராக வழக்கொன்றுமில்லையென்றும் ஆனால் ஒன்றரை வருடகாலம் ரிமாண்டில் இருந்ததாகவும் கூறினார்.

சாந்தி யாழ். 10.30, 2.30, 6.30 மட்டும்
இன்னும் சில தினங்கள் மட்டும்
இப்பொழுது மிகுந்த பரபரப்பூட்டி காட்சியளிக்கிறது!
சிவாஜி, லட்சுமி
மனோரமா, தேங்காய்
தியாகம் வண்ண சித்திரம்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
9-30
பிரதாப்—சோபா
மூடு பனி

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
மணாளனே
மங்கையின் பாக்கியம்

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
மனோகரா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
3வது வெற்றி மாதம்
கமலஹாசன், ஜெய்சங்கர், ஸ்ரீதேவி
வாழ்வே மாயம் (ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00, 9-30,
ஜனத்திரள் நிறைந்த - 8வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
சகலகலா வல்லவன்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00.
BRUCE LEE'S (Karate Film)
Exit the Dragon,
Enter the Tiger

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 4-30,7-00
His Partner brutally murdered......
His girl friend executed......
SEAN KANE is out for VENGENCE
CHUCK NORRIS in
An Eye For An Eye

## பிக்னல் வெற்றி

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக் கல்லூரி வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டியில் பிக்னல் இல்லம் 1151 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்று வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துள்ளது ஸ்கொட் இல்லம் 0561/2 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பேஜ் இல்லம் 991 1/2 புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தையும் பெற்றன. கல்லூரி அதிபர் திரு. வி. சுந்தரதாஸ் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் வட்டார உடற்பயிற்சி கல்வி அதிகாரி திரு. வ. கணேசலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். திருமதி ருக்மணி கணேசலிங்கம் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

## ★ சற்றடே றிவியூ, சுதந்திரன் சீல்: நல்லூர் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'சற்றடே றிவியூ' 'சுதந்திரன்' ஆகிய பத்திரிகைகளின் காரியாலயங்களுக்கு சீல் வைக்கப்பட்டதைக் கண்டித்து நல்லூர்த் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி கிளை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

நல்லூர் எம். பி யின் அலுவலகத்தில், கிளையின் உபதலைவர் சட்டத்தரணி இராஜா விசுவநாதன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

'மேற்குறிப்பிட்ட இரு பத்திரிகைகளும் தடை செய்யப்பட்டது ஜனநாயக விரோத செயல் என்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலை அணியின் தலைவர் டாக்டர் எஸ் ஏ. தர்மலிங்கம், செயலாளர் திரு. கோவை மகேசன் ஆகியோர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளது மனித அடிப்படை உரிமைகளைப் பறிப்பதாகும் என்றும், ஒடுக்கப்படும் மக்களுக்காகக் குரல்கொடுப்பதை தடைசெய்வது ஜனநாயகத்தை அழிக்கும் செயல் என்றும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதுடன், உடனடியாக இருவரையும் விடுதலை செய்யவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது

## இந்தியாவுக்கு கடத்தவிருந்த துணிகள் சிக்கின!

(சுண்டிக்குளி)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த தனியார் வௌதி ஒன்றைச் சந்தேகத்தில் சோதனையிட்ட யாழ்ப்பாணம் பொலிசார் அதனுள் இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான இருபத்திரண்டு கட்டுப் பொலிஸ்டர் துணிகளைக் கைப்பற்றினர்.

இவை இந்தியாவுக்குக் கடத்துவதற்கு கொண்டுவரப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகித்த பொலிசார், அவற்றை யாழ். சுங்கப் பகுதியில் ஒப்படைத்துள்ளனர், சுங்கப் பகுதியினர் விசாரணை செய்து வருகின்றனர்.

# இன்றைய பலன்

ஆனி 23-ம் திகதி
வியாழக்கிழமை
(7-7-83)

**மேடம்:** மனதில் விரக்தி நிலை தென்படும் உடல்நலமும் பாதிக்கப்படலாம் கால்நடைகளால் நஷ்டம் ஏற்படலாம் பூமிப்பிணக்குகளின் மூலம் வழக்கு ஏற்படலாம்.

**இடபம்:** முன்னேற்றம் தடைப்படும் குறுக்கு வழித்தலையீடு குழப்பங்களை ஏற்படுத்தலாம் எதேச்சாதிகாரப் போக்கால் சிலரைப் பகைத்துக்கொள்ளவும் நேரிடும் அமைதி நன்று

**மிதுனம்:** கன்னல் மொழி மூலம் காரியங்களைச் சாதிப்பீர்கள் கவர்ச்சிகரமான உடையணிவதற்கு விரும்புவீர்கள் ஆரம்பத்தில் எதிர்த்தவர்கள் ஆதரவு கொடுப்பதற்கு முன்வருவார்கள்.

**கடகம்:** தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும் கண்துடைப்பு வேலை நடக்கும் கவனம் செலுத்தவும் பெரியோரைப் பகைத்துக் கொள்ளாமல் பொறுமையைப் பேணி நடக்கவும்.

**சிம்மம்:** அறிஞர்கள் சந்திப்பு இன்று நிகழும் அறவழியில் ஆர்வம் பிறக்கும் ஆக்கப் பணியில் ஆர்வம் பிறக்கும் இலட்சிய வாதிகளுக்கும் பொன்னான தினம்.

**கன்னி:** கனிவான சம்பவங்கள் இடம் பெறும் அபிப்பிராய பேதங்கள் மறையும் குழந்தை ஒன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும் தொழிலில் நல்லமாற்றமுண்டு.

**துலாம்:** தூரத்துப் பயணம் துயரத்தில் ஆழ்த்தும் வருமானத்தில் வீழ்ச்சியுண்டு வைத்தியச் செலவுக்கு இடமுண்டு பகைமூட்டம் தோன்றும் பதட்டமும் உடன் சேரும்.

**விருச்சிகம்:** தாம்பத்திய வாழ்க்கையில் மகிழ்ச்சிகாணப்படும் குடும்பத்தில் தென்றல் வீசும் சுவையான நிகழ்ச்சிகள் இடம்பெறும் கலஸ்திரவழியில் திருமணமுண்டு.

**தனு:** போட்டி விவகாரங்களில் பணம் விரயமாகும் ஆணவம் பேசுகிறவன் அரிய சந்தர்ப்பம் நழுவக் கூடும் எதிரிகள் மறைமுகமாகத் தாக்குதல் நடத்துவார்.

**மகரம்:** இலட்சியப் பாதையில் வெற்றி நடைபோடுவீர்கள் உயர் மட்டத்து அன்பு அவசியம் கிடைக்கும் பதவி உயர்வுக்கு இடமுண்டு இறை வழிபாடு நடைபெறும் தந்தை ஆதரவு உண்டு.

**கும்பம்:** தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றம் திடீரு வழி கோலப்படலாம் போட்டிகாண்பதற்கு ஏற்ற தினம் மேலதிகாரிகளின் பாராட்டுக்களுக்கும் இலக்காகுவீர்.

**மீனம்:** நினைத்த காரியத்தில் வெற்றி உண்டு பகைத்தவர்களே பாராட்ட வருவார்கள் பணவிவகாரத்தில் நல்ல திருப்பமுண்டு புதுமையான சம்பவங்கள் இடம்பெறும் விருந்தினர் வருகை உண்டு.

— சோதிடக்கலைநிதி —
திருமலை க. வேலுப்பிள்ளை

கல்வித்துறை....
(3-ம் பக்கத்தொடர்ச்சி)

சிறப்பித்தனர்.

வித்தியாலய அதிபர் திரு. மயில்வாகனத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகிய இவ்வைபவம் ஒன்றியச்செயலாளர் செல்வி பொ. சாரதாதேவியின் நன்றியுரையுடன் நிறைவேய்தியது.

